சார்பு நீதிமன்றம், பொள்ளாச்சி

வழக்கு எண். எம்.சி.ஓ.பி. 165/2017

**PW 1 புஷ்பவல்லி** **22.09.2023**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி</u>

| | |
|---|---|
| 1.மசாஆ 1 – | முதல் தகவல் அறிக்கை சான்று நகல். |
| 2 மசாஆ 2 – | TN 37 BC 2844 TATA INDICA CAR மோட்டார் வாகன ஆய்வறிக்கை சான்று நகல். |
| 3.மசாஆ 3 – | TN 37 BC 2844 TATA INDICA CAR 2ம் எதிர்மனுதாரரின் காப்பீடு பாலிசி புகைப்பட நகல் |
| 4.மசாஆ 4 – | சதீஸ்குமாரின் பிரேத பரிசோதனை அறிக்கையின் சான்று நகல் |
| 5.மசாஆ 5 – | நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். II பொள்ளாச்சியில் தாக்கல் செய்த இறுதி அறிக்கையின் சான்றிட்ட நகல் |
| 6.மசாஆ 6 – | சதீஸ்குமாரின் ஓட்டுநர் உரிமம் நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). |
| 7.மசாஆ 7 – | சதீஸ்குமாரின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). |
| 8.மசாஆ 8 – | சதீஸ்குமாரின் பாஸ்போட் மற்றும் விசா புகைப்பட நகல் |
| 9.மசாஆ 9 – | சதீஸ்குமாரின் இறப்பு சான்று (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). |
| 10.மசாஆ 10 – | சதீஸ்குமாரின் வாரிசு சான்று (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது). |
| 11.மசாஆ 11 – | சதீஸ்குமாரின் DCS Operator ஆக National Cement Company ல் Republic of Yemon நிறுவனத்தால் வழங்கப்பட்ட Occupation Proof |
| 12.மசாஆ 12 – | சதீஸ்குமாரின் Anna University ல் வழங்கப்பட்ட Decree Certificate புகைப்பட நகல் |
| 13.மசாஆ 13 – | சதீஸ்குமாரின் Anna University ல் வழங்கப்பட்ட Provisional Certificate புகைப்பட நகல் |
| 14.மசாஆ 14 – | சதீஸ்குமாரின் Course and conduct Certificate புகைப்பட நகல் |

15.மசாஆ 15 – Employment Contract between National Cement Company Yeman and Sathishkumar – Xerox copy

16.மசாஆ 16 – Yeman employment Permit Certificate – Xerox copy

17.மசாஆ 17 – Salary Statement of Sathishkumar

18.மசாஆ 18 – Letter of Employment given by General Manager, National Cement Company, Yeman to Sathishkumar

19.மசாஆ 19 – சதீஸ்குமாரின் DCS Operator ஆக National Cement Company ல் பணியாற்றியதற்கு கம்பெனியால் வழங்கப்பட்ட Identity Card ன் புகைப்பட நகல்

20.மசாஆ 20 – சதீஸ்குமாரின் Statement of Accounts – State Bank of India, Madathukulam Branch

21.மசாஆ 21 – சதீஸ்குமாரின் Statement of Accounts – ICICI Bank of India, Udumalpet Branch

22.மசாஆ 22 – ஜெயபிரகாசின் Statement of Accounts – Indian Bank of India, Udumalpet Branch

23.மசாஆ 23 – ஜெயபிரகாசின் Statement of Accounts – Syndicate Bank of India, Anikkadavu Branch

24.மசாஆ 24 – சதீஸ்குமாரின் விளையாட்டுத்துறை Power Lifting Interjob tourment 2007-2008 வருடம் Anna University யால் வழங்கப்பட்ட 2ம் பரிசு பெற்றதற்கு Certificate of merit (புகைப்பட நகல்)

25.மசாஆ 25 – புஷ்பவள்ளியின் காயச் சான்று

26.மசாஆ 26 – கங்கா மருத்துவமனையில் வழங்கப்பட்ட மருத்துவ பில்கள்

27.மசாஆ 27 – கங்கா மருத்துவமனையில் வழங்கப்பட்ட டிஸ்சார்ச் சம்மரி

28.மசாஆ 28 – TN 37-BC 2844 TATA INDICA CAR RC Book புகைப்பட நகல்

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

கார் என்னுடைய கார் என்றால் சரிதான். கார் என் கணவர் பெயரில்

உள்ளது என்றால் சரிதான். காரில் நான், என் கணவர், என் மகன் மூவரும் பயணம் செய்தோம். காரை என் மகன் சதீஷ்குமார் ஓட்டினார். சதீஷ்குமார் காரை ஓட்டிச்சென்று விபத்தில் இறந்துவிட்டதால் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். விபத்து உடுமலைப்பேட்டையிலிருந்து ஆனைமலை மாசாணியம்மன் கோவிலுக்கு செல்லும் வழியில் கெடிமேடு வாய்க்கால் அருகில் டயர் பஞ்சராகி மரத்தில் மோதி விபத்து ஏற்பட்டது. போலிசார் என்னை விசாரித்தார்கள். நான் போலிசாரிடம் அளித்த வாக்குமூலத்தில் என் மகன் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி திடீரென பிரேக் பிடித்ததால் கார் இழுத்துச் சென்று மரத்தில் மோதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். என் கணவர் ஜெயபிரகாஷ்தான் போலிசில் புகார் அளித்து மாசாஆ 1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். மாசாஆ 1ல் என் மகன் அதிவேகமாக வாகனத்தை ஓட்டி திடீரென பிரேக் பிடித்ததால் கார் இழுத்துச் சென்று மரத்தில் மோதியதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். எங்கள் காரில் சம்பளம் கொடுத்து காரை ஓட்டும் ஓட்டுநருக்கும் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான், என் மகன் ஆகியோர் என் கணவருக்கு சொந்தமான காரில் பயணம் செய்ததால் நாங்கள் மூன்றாம் நபர்கள் அல்ல என்றால் சரியல்ல. அதனால் காரின் ஓட்டுநராக வண்டியை என் மகன் ஓட்டியுள்ளதால் என் மகனுக்கு காப்பீடு செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. போலிசாரிடம் புகார் கொடுத்து அதன் அடிப்படையில் செய்யப்பட்ட விசாரணையில் சொன்ன விபரங்களுக்கு முரணாக தற்போது சாட்சியம் அளிப்பதால் எனக்கு நஷ்டஈடு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. விபத்துக்குப்பின் மோட்டார் வாகன ஆய்வாளர் காரை பார்வையிட்டு எங்கள் காரின் டயர் திருப்திகரமாக உள்ளதாக சான்று வழங்கியுள்ளார் என்றால் சரிதான். மோட்டார் வாகன ஆய்வாளர் தன் கருத்துரையில் மோட்டார் வாகன செயலிழக்கத்தால் விபத்து ஏற்படவில்லை

என மசாஆ 2ல் சான்றளித்துள்ளார் என்றால் சரிதான். என் மகன் சிமெண்ட் கம்பெனியில் வேலையிலிருந்தார். என் மகனுக்கு சம்பள வருமானம் இல்லை என்றாலும் நான் கேட்டுள்ள இழப்பீடு அதிகம் என்றாலும் சரியல்ல. என் மகன் அஜாக்கிரதையால் விபத்து நடைபெற்றுள்ளதால் நஷ்டஈடு எதுவும் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. என் கணவரை கூட்டு சேர்த்து அவரை 1ம் எதிர்மனுதாரராக காட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

இச்சாட்சியம் என் முன்பு நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அது சரி என்று அவரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

சார்பு நீதிபதி
பொள்ளாச்சி